# ஏன் வளர்ந்தாய்?

**TA5126**

பனைமரமே ! பனைமரமே !
ஏன் வளர்ந்தாய் பனைமரமே?
வீடுகட்ட மரமாவேன் ;
மேற்கூரை நானாவேன்; (-)
கட்ட நல்ல கயிறாவேன்;
கன்று கட்டத் தும்பாவேன்; (-)
களைத்து வரும் பேர்களுக்குக்
கைவிசிறி நானாவேன் ; (-)
பசித்து வரும் பேர்களுக்குப்
பனம்பழமும் தந்திடுவேன்; (-)
பக்குவாய் உரித்துண்ணப்
பனங்கிழங்கும் நானாவேன்; (-)
எனைவிரும்பும் பேர்களுக்குப்
பனைவெல்லமும் தந்திடுவேன் (-)
பத்தியமாய் மருந்துண்ணப்
பனங்கற்கண்டும் நான் தருவேன்; (-)
பல்லுயிர்வாழ் இடமாவேன்;
பதநீரும் தந்திடுவேன்; (-)
எழுத்தோலைச் சுவடி செய்யக்
குருத்தோலையும் தந்திடுவேன்; (-)
சித்திரைக் கோடையிலே
சிறந்த நுங்கை நான் தருவேன் ; (-)
எத்திசையில் உள்ளவர்க்கும்
இயல் உதவி செய்திடுவேன்; (-)
எனைப் போலே நீங்கள் எல்லாம்
இயல் உதவி செய்வீரேல் (-)
நலமுடனே நாமெல்லாம்
நன்றாக வாழ்ந்திடலாம் (-)

# பெரிய பனை

ஓங்கி வளரும் பனை
உயரமான பனை
ஓலை தரும் பனை
உறுதியான பனை
விசிறி தரும் பனை
விருப்பமான பனை
நுங்கு தரும் பனை
எங்கும் இருக்கும் பனை
கட்டை தரும் பனை
கருப்பு நிறப் பனை
வேர்கள் அடர்ந்த பனை
வேலியில்லாப் பனை
எங்கள் ஊர் பனை
எவ்வளவு பெரிய பனை ?

# பனைமரம்

நெட்டை நெட்டைப் பனைமரம்
நேர்த்தியான பனைமரம்

கட்டுவதற்குக் கயிறாவேன்
காலுகட்டும் தும்பாவேன்

தூரத்துத் தேசத்துக்குத்
தூது ஓலை நானாவேன்

காது வளர்ந்த கிழவிக்குக்
காது ஓலை நானாவேன்

பசியோடு வருவோர்க்குப்
பனம்பழமும் நானாவேன்

இளைப்பார வருவோர்க்கு
இளநுங்கு நானாவேன்

வெந்நீர் கொதிக்க வைக்க
விறகுக்கட்டை நானாவேன்

- கிராமத்துச் சிறுவர் பாடல்கள் , முனைவர் எ.மு. ராஜன்.